94—

நவீனப்படுத்துதல்

***17302—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கடற்கரை ஓரங்களிலுள்ள புயல் பாதுகாப்பு மையங்களை நவீனப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் உள்ள 124 புயல் பாதுகாப்பு மையங்களைப் பராமரிக்கும் பணி உள்ளாட்சித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவற்றில் 114 புயல் பாதுகாப்பு இல்லங்களைப் பழுது பார்ப்பதற்கு உலக வங்கிமூலம் சுனாமி மறு சீரமைப்புத் திட்டத்தின்கீழ், ரூ.251.05 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறையால் பழுது பார்க்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 9–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பெருமுயற்சி செய்து, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் ஐயா அவர்களின் ஆலோசனையின்பேரில், நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் 6 இலட்சத்து 20 ஆயிரம் பேர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாவும், 2 இலட்சத்து 10 ஆயிரம் பேர்களுக்கு 2 ஏக்கர் நிலங்களையும் விவசாயிகளுக்கு வழங்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டி, தமிழ்நாட்டில் கடற்கரை ஓரங்களில் உள்ள புயல் பாதுகாப்பு மையங்களை நவீனப்படுத்தாததால் தமிழ்நாட்டில் புயல் வருவதை முன்கூட்டியே தெரிந்துகொள்ள சுனாமி எச்சரிக்கைக் கருவி நிறுவப்பட்டுள்ளதா

2009 ஜூலை 8]

என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், இந்தக் கருவி ஜப்பானிலும், அமெரிக்காவிலும் மட்டும் இருப்பதாகச் சொல்கிறார்கள். புயல் பாதுகாப்பு மையங்களை நவீனப்படுத்தாததால்—இன்று காலையிலேகூட தொலைக்காட்சியிலே பார்த்தேன்; கடல் அரிப்பு ஏற்படுவதால் பொதுமக்களும், மீனவர்களும் பயப்படுவதாக செய்தியைப் பார்த்தேன்; ஆகவே—கடற்கரை ஓரங்களிலே, மீனவர்களும், பொதுமக்களும், குடியிருக்கின்ற பகுதிகளுக்கு மட்டும் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி போன்ற இடர்ப்பாடுகள் ஏற்படுகின்ற நேரத்திலே, எதிர்பாராமல் வருகின்ற இயற்கைப் பேரிடர்கள் ஏற்படுகின்ற நேரத்திலே, அதை அறிவிப்பதற்காக இருக்கும் நிலையம், மத்திய அரசினுடைய சார்பாக உலக வங்கியினுடைய நிதியுதவியோடு ஹைதராபாத்திலே அமைக்கப்பட்டிருக்கிறது. எங்கேயாவது நம்முடைய கடற்கரைப் பகுதியிலே இயற்கைச் சீற்றம் ஏற்படுகின்றபோது, ஜப்பானிலும், இந்தோனேஷியாவிலும் மற்றும் பிற பகுதிகளிலும் இருப்பதைப்போன்று, இந்த ஆய்வுகளை ஒருங்கிணைத்து நம்முடைய தமிழகத்திற்கும் செய்திகளை அனுப்புகின்ற வழிமுறை இருக்கின்றது. தமிழகத்திலே வானிலையை அறிவிக்கின்ற மையங்கள்தான் சென்னையிலும், காரைக்காலிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய வரலாற்றில் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோதும் சரி, தமிழக காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்த போதும் சரி, தமிழ்நாட்டில் சுனாமி வந்ததா என்றால் இல்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் ஐயா அவர்கள், 5 முறை ஆட்சியிலே இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய காலத்திலும் சுனாமி வந்ததா என்றால் இல்லை. காலையில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம், கேள்விக்கு வாருங்கள்.

திரு. கோவை தங்கம்: கேள்விக்கு வருகிறேன் தலைவர் அவர்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுனாமி வர வேண்டாம்; நீங்கள் கேள்விக்கு வாருங்கள்.

திரு. கோவை தங்கம்: புயல் பாதுகாப்பு மையங்களில் போதுமான பணியாளர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். போதுமான பணியாளர்கள் இல்லாததால், பராமரிப்பு இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, போதுமான பணியாளர்களை நியமனம் செய்து பராமரிப்பு செய்வதற்கு, நவீன முறையில் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, புயல் பாதுகாப்பு இல்லங்களை உள்ளாட்சித் துறையிலே, கடலோரப் பகுதியிலே இருக்கின்ற ஊராட்சி மன்றங்கள் மிகச் சிறப்பாக நிருவகித்து வருகின்றன. காரணம், அந்தப் புயல் பாதுகாப்பு இல்லங்களில் மழை, வெள்ளம் வருகின்ற காலங்களிலே, மழை பெய்கின்ற நேரங்களிலே மக்கள் அங்கே தங்குவார்கள். ஆனால் மற்ற சாதாரண நாட்களிலே திருமண நிகழ்ச்சிகள், பொது நிகழ்ச்சிகள், இன்னும் பள்ளிக் கூடங்கள், பொதுப் பயன்பாட்டிற்காக, தினம் தினம் பயன்படுத்துகின்ற மையமாக அந்த இல்லங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. எனவே, அதை உள்ளாட்சி மன்றம் மிகச் சிறந்த முறையிலே பாதுகாத்து வருகின்றது. அதற்கு அலுவலர்களும் இருக்கின்றார்கள். புதிதாக வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இப்பொழுது நமது சுனாமி மறு சீரமைப்புத் திட்டத்தின்கீழ், நம்முடைய தமிழக முதல்வர் அவர்களும், இப்பொழுது உலக வங்கியோடு நடத்திய பேச்சுவார்த்தையின் காரணமாக, 78 புதிய இல்லங்கள் அமைப்பதற்கான ஆணையை நமது அரசு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து.

திரு. வே. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் கடற்கரை ஓரமாகக் கட்டப்பட்டிருக்கக்கூடிய புயல்

2009 ஜூலை 8]

பாதுகாப்பு இல்லங்கள் தற்போது 150 மீட்டர், 200 மீட்டருக்குள்ளாகக் கட்டப்பட்டிருக்கின்றன. மத்திய அரசால் நிறைவேற்றப்பட்டிருக்கிற கடலோர மண்டல மேலாண்மை ஆணையம், கடலிலிருந்து 500 மீட்டருக்கு அப்பால்தான் கட்டடங்கள் எழுப்ப வேண்டுமெனத் தற்போது முடிவு செய்திருக்கிறது. எனவே, தற்போது இருக்கக்கூடிய பழைய புயல் பாதுகாப்புக் கட்டடங்களை இடித்துவிட்டு, 500 மீட்டருக்கு அப்பால் புதிய புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்படுமா? நாகப்பட்டினத்தில் சுனாமி எச்சரிக்கைக் கருவி பொருத்தப்படுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி போன்ற இயற்கைப் பேரிடர்களை அறிவிக்கின்ற அந்த மையம் தமிழகத்திற்குத் தேவை இல்லை; காரணம், ஐதராபாத்திலே இப்போது இருக்கிறது. எதிர்காலத்தில் தேவைப்பட்டால் அதை அமைக்கலாம். அவர்கள் சொன்னதைப்போல, அருகில் பாதுகாப்பு இல்லங்கள் என்பது அவர்கள் வசிக்கக்கூடிய இடங்களிலிருந்து, வசிக்கக்கூடிய வீட்டிலிருந்து ஒன்றரை கிலோ மீட்டருக்குள் இருக்க வேண்டுமென்ற மத்திய அரசினுடைய அறிவுரையின்படிதான், அங்கிருக்கக்கூடிய தொழில்நுட்பத்தோடுதான் ஏற்கெனவே பாதுகாப்பு இல்லங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன; இப்போது அமைக்கப்படுகிற இல்லங்களும் அப்படித்தான். ஒருவேளை திடீரென்று வெள்ளம் வந்துவிட்டால், அறிவிப்பு வந்தவுடனே, 20 நிமிடத்தில் பாதிப்பு வரும் என்ற நிலைமையிலே, 15 நிமிடத்திற்குள் அந்த இடத்திலிருந்து அவர்களை காலி செய்து, அவர்களுடைய உடைமைகளையும், அவர்களுடைய உயிர்களையும் பாதுகாப்பதற்கு, அவை அருகில் இருக்க வேண்டும் என்பதுதான் மத்திய அரசினுடைய கொள்கையாக இருக்கிறது; தொழில்நுட்பமாக இருக்கிறது. அந்தத் தொழில்நுட்பத்தினுடைய அடிப்படையிலேதான் அந்த இல்லங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, அறிவிப்பு செய்வதில் ஒரு புதிய முறையை நமது அரசு கொண்டுள்ளது. சென்னை, காரைக்காலில் இருக்கின்ற வானிலை எச்சரிக்கை மையம், புயல், வெள்ளம், மற்றவற்றை அறிவிப்பதைப் போல, தென் மாவட்டத்தில் வானிலை எச்சரிக்கை மையம் ஒன்றை இராமநாதபுரத்திலும் அமைக்கலாம் என்ற குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. (குறுக்கீடு)

[2009 ஜூலை 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேள்வி நேரத்தில் என்ன கேட்கப்போகிறீர்கள்? (குறுக்கீடு) இல்லை, இல்லை. please. கேள்வியிலே என்ன interfere செய்யப் போகிறீர்கள்? (குறுக்கீடு) துணைக் கேள்வியா? சரி. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்ட சுனாமி பேரலையினால், 13 கடலோர மாவட்டங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு, எண்ணாயிரம் மனித உயிர்கள் மாண்டு போகக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அங்கு வாழ்கின்ற மக்களுக்கு நிரந்தரமான ஒரு பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 5,000 கோடி ரூபாய்க்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து, நிரந்தரமான தடுப்புச் சுவர் அங்கே எழுப்பப்பட வேண்டுமென்று மத்திய அரசிற்கும், மத்தியத் திட்டக் குழுவிற்கும் பிரேரணை அனுப்பி வைத்தார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், தடுப்புச் சுவர் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால், மழை, வெள்ளக் காலங்களிலே, சுனாமி வருகின்றபோது, அலை அடிக்கின்றபோது, கடலோரங்களில் இருக்கின்றவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக அரசால் ஏற்கெனவே சுனாமி மறு சீரமைப்புத் திட்டத்தின்கீழ் மாங்குரோவ் காடுகள் முழுமையாக வளர்க்கப்பட்டிருக்கின்றன. வருகின்ற அலைகளை, பேரலைகளைத் தடுக்கின்ற வகையிலே நம்முடைய வனத் துறைமூலமாக முழுமையாக மாங்குரோவ் காடுகள் அமைக்கப்பட்டு, இப்போது ஒரு பாதுகாப்பான நிலை இருக்கிறது என்பதை நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அதேமாதிரி தடுப்புச் சுவர் கட்டுகின்ற எண்ணம் இல்லை. உங்களுக்கே தெரியும், பொதுப் பணித் துறையால் கடலோரங்களில் அரிப்பு ஏற்படுகிறபோது அங்கே கல்தான் போடுகிறார்கள் என்று. தடுப்புச் சுவர் எங்கேயும் கட்டுவது இல்லை. ஏனென்றால் தடுப்புச் சுவர் நிரந்தரமாக நிற்காது. ஆற்றோரங்களில் கட்டுகின்ற தடுப்புச் சுவரே

நிற்காது. கடல் அலைக்கு எப்படி நிற்கும் என்பது எனக்குத் தெரியவில்லை. எனவே, அதுபற்றி இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

95—

சீரமைப்பு

***61339—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி ஸ்ரீபவ ஔஷதீஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான திருக்குளத்தைத் தூர் வாரிச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருள்மிகு ஸ்ரீபவ ஔஷதீஸ்வரர் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் குளத்தினைத் தூர் வாரிட வேண்டி, ரூ. 3 இலட்சத்து 12 ஆயிரத்திற்கு, திருக்கோயில் நிதிமூலமாக மதிப்பீடு அங்கீகாரம் வழங்கப்பட்டு, பணிகள் தொடங்கிட, இயந்திரங்கள் குளத்தில் இறக்கப்பட்டன. ஆனால், குளத்தில் நீரூற்று அதிகமாக உள்ளதால் மணல் வாரும் இயந்திரங்கள் சேற்றில் சிக்கியதால் பணி தொடங்கப்படாமல் உள்ளது. குளத்தில் நீர் வற்றியவுடன் பணி தொடங்கப்படும். அதேநேரத்தில் சுற்றுச் சுவர் அமைக்க கோயிலில் போதிய நிதி வசதி இல்லை. திருக்கோயில் நிதி மேம்பட்டாலோ அல்லது மாவட்ட நிருவாகத்தின் நிதி கிடைக்கப்பெற்றாலோ அல்லது